NP – 089

**III Semester B.Com. Examination, March/April 2023**
**(NEP – 2022-23 and Onwards) (Freshers)**
**TAMIL LANGUAGE (Paper – III) (Part – I)**

Time : 2½ Hours | Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(4×1=4)**

1) முத்தொள்ளாயிரம் இவரைப் பற்றி பாடப்பட்டது
   1) களப்பிரர்கள் 2) பல்லவர்கள்
   3) மூவேந்தர்கள் 4) நாயக்கர்கள்

2) திருவரங்கக் கலம்பகத்தைப் பாடியவர்
   1) அழகிய மணவாளதாசர் 2) ஔவையார்
   3) திரிகூடராசப்பக் கவிராயர் 4) கம்பர்

3) தண்டாமல் ஈவது __________
   1) வண்மை 2) தாளாண்மை
   3) காற்கூலி 4) அறம்

4) மக்களின் வாழ்வியலுக்கு இலக்கணம் கூறுவது
   1) எழுத்திலக்கணம் 2) சொல் இலக்கணம்
   3) பொருள் இலக்கணம் 4) யாப்பிலக்கணம்

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(4×4=16)**

1) மனத்துள் அவத்தைப்படும் என்மையல் எல்லாம் சொல்லிப்
   புனத்துளவத்தைக் கொணரீர் போய்

2) சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
   வைதத்தொரு கல்வி மனப்பழக்கம்

3) நன்னலம் காணக் கதவம் துளைதொட்டார்க்கு
   என்னை கொல் கைம்மா றினி

4) ஆலைப் பலாவாக்கல் ஆமோ ? அருஞ்சுணக்கன்
   வாலை நிமிர்க்க வசமாமோ ?

P.T.O.

5) நீயோ நொண்டி, நீ என்னடா சேவகம் செஞ்சி
நஷ்டத்தைச் சரிக்கட்ட முடியும் ?

6) மரணத்தின் நிழலிலேயே குடியிருந்த மனிதருக்கு
என்னை மனைவியாக்கி வேடிக்கை பார்த்தீர்கள்
அப்போதெல்லாம் எனக்காக யாராவது
பரிதாபப்பட்டீர்களா ?

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4×6=24)

1) சேரநாட்டு வளம் குறித்து முத்தொள்ளாயிரம் கூறுவனவற்றை விளக்குக.

2) மறவனின் வீரவுரைகளை திருவரங்கக் கலம்பகம் எவ்வாறு எடுத்துரைக்கின்றது ?

3) அரியது, இனியது பற்றிய ஔவையாரின் கருத்துகளை விளக்குக.

4) முத்தொள்ளாயிரம் காட்டும் போர்க்களக் காட்சிகளை விளக்குக.

5) டாக்டர் சத்திய மூர்த்தியின் பாத்திரப்படைப்புச் சிறப்பினை எழுதுக.

6) ‘யுகமலர்’ என்னும் சிறுகதை புலப்படுத்தும் பெண்ணிய கருத்துகளை விளக்குக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4×4=16)

1) அன்பின் ஐந்திணைக்குரிய முதற்பொருள் குறித்து எழுதுக.

2) குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களைக் குறிப்பிடுக.

3) உரிப்பொருள் என்றால் என்ன ? ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்களைக் கூறுக.

4) புறத்திணை என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

5) வஞ்சி, காஞ்சித் திணைகளை விளக்குக.

6) அகத்திணை என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

---